பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 227

சனிக்கிழமை
11 ஜூலை 2026

ஆனி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## பேராசிரியர் ரகுராம் வழக்கில் திங்கட்கிழமையே விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் உள்ளிட்ட 14 தரப்புகளுக்கு எதிராக பருத்தித்துத்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை »11

## மன்னார்க் கடற்பரப்பில் இன்று கடும் காற்று!

மன்னார், ஜூலை 11
மன்னார்க் கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்றும் இதனால் மீனவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை »11



## காணிகளை விடுவிக்குமாறு மயிலிட்டியில் நேற்றும் போர்

யாழ்ப்பாணம், ஜூலை 11
மயிலிட்டி பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி பொதுமக்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். வலிகாமம் வடக்கில் ஜே/249, 256, 248, »11

# யாழ். விமான நிலையத்தில் முழுமையான அபிவிருத்தி!

### அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 11
நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விரிவான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார். »11

### 21 இலட்சம் ரூபா

## போலித்தாள்கள் வைத்திருந்த நபருக்கு 6 வருடங்கள் சிறை!

### யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 11
21 லட்சம் ரூபா போலி நாணயத் தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஆறு வருடகால சிறைத்தண்டனை விதித்துள்ளது. »11

### சுற்றுலாவிகளுக்கு இடையூறாக

## யாழ். நகரில் யாசகம்; 30 பேருக்கு எச்சரிக்கை!

விரிவு பக்கம்:- 11

## திசைகாட்டி அரசாங்கத்தில் பொறுப்புக்கூறல் உள்ளது!

### ரஞ்சன் ராமநாயக்க பாராட்டு



கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்திடம் பொறுப்புக்கூறும் தன்மை உள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பாராட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம் »11

### சவர்க்காரத்துக்குள் மறைத்து

## ஹெரோய்ன் கடத்திய சந்தேகநபர் கைது!

### 7 கிராம் ஹெரோய்ன் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணத்துக்கு பொதிகள் சேவை ஊடாக சவர்க்காரத்துக்குள் மறைத்து வைத்து ஹெரோய்ன் »11

## யாழில் இளைஞர் ஒருவரை கடத்திச்சென்று சித்திரவதை

### கூரிய வாள்களுடன் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்தி சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

## டித்வா நிவாரணத் திட்டத்துக்கு தேர்தல் நிதி பயன்படவில்லை!

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 11
மாகாணசபைத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, டித்வா பேரிடர் நிவாரணத்துக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
டித்வா பேரிடரால் நாடு பாதிக்கப்பட்ட வேளையில், நாட்டை மீளக் கட்டமைப்பதற்காக பல்வேறு கொடையாளர்களால் நிதி வழங்கப்பட்டது. இந்த நிதியனைத்தும் முறை »11

### சிறைக்கலவர எதிரொலி

## நீதியமைச்சர் ஹர்ஷண மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### எதிர்க்கட்சிகள் நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 11
நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்துள்ளன. »11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4486 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 08 11 22 77 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1553 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 31 36 45 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0512 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 4 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2592 |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 29 40 52 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6244 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 8 4 7 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2274 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 05 15 52 81 |
| விசேட எழுத்து | H |

| சுப துவசக் | |
|---|---|
| திகதி | 10.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0360 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 25 32 |

# நிதி தூயதாக்கல் தடைச்சட்டத்தினூடாக பொலிஸாருக்கு எல்லையற்ற அதிகாரம்!

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 11

**புதிய பணத்தூயதாக்கல் சட்டத்தின் பிரகாரம், எவரேனும் ஒருவரின் சொத்தை நீதிமன்றத்தின் அனுமதியின்றி, பொலிஸார் தமது சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே முடக்குவதற்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்படுகின்றது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பணம் தூயதாக்கல் தடைச்சட்டமூலம் உள்ளிட்ட நிதிசார் திருத்தச் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய சட்டத்தின்படி, சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரின் சொத்தை முதற்கட்டமாக 14 நாள்களுக்கும், இரண்டாம் கட்டமாக மேலும் 21 நாள்களுக்கும் முடக்குவதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைக் கூடப் பெறவேண்டிய அவசியமில்லை. பொலிஸாருக்கு வரையறையற்ற அதிகாரம் வழங்கப்பட்டால் ஊழல் மோசடிகள் மேலும் தீவிரமடையும். பொலிஸாரின் தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் தவறான சந்தேகங்கள் பொதுமக்களுக்குப் பெரும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். அதேபோல், நிதிப் புலனாய்வுப் பிரிவுக்கும் எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த முறையற்ற கட்டமைப்புகளால் நாட்டில் கறுப்புச் சந்தை முறைமையே உருவாகும் அபாயம் உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசாரணைகளால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள இளைஞர்கள், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் வாராவாரம் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் பணம் அனுப்பினால்கூட விசாரணை நடத்தும் நிலைமையே காணப்படுகிறது. இந்தச் சட்டம் பொலிஸாரின் சந்தேகத்தின் பெயரில் மக்களின் சொத்துகள் மாதக்கணக்கில் முடக்கப்படும் அபாயம் உள்ளது. வருங்காலத்தில் ஆட்சிக்கு வருபவர்கள் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் ஏற்படும் கொடூர விளைவுகளைச் சிந்தித்துப் பார்த்து, இந்த அதிகாரங்களை நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 10.07.2026 | வெள்ளிக்கிழமை | 0952 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| D | 5 0 1 8 6 8 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3218 | L | 13 21 23 57 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 20 22 52 69 | 5379 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 1048 | 09 11 21 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 16 26 52 | 4930 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | | திகதி | தினம் |
| | | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 35 | 06 15 19 69 | 2394 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 10.07.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 12 39 49 59 | 3044 |

# விமல் வீரவன்ஸவின் நஷ்டஈடு உறுதிப்படுத்திய மேல்நீதிமன்று

கொழும்பு,ஜூலை 11



“நெத்த வெனுவட்ட எத்த” (இல்லாததற்குப் பதிலாக உண்மை) என்ற புத்தகத்தை அச்சிட்டதன் மூலம் புலமைச் சொத்துச் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக, ரில்வின் சில்வாவுக்கு 10 இலட்சம் ரூபா பணத்தை நஷ்ட ஈடாக செலுத்துமாறு கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு விதித்த உத்தரவை மேன் முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ வெளியிட்ட இந்தப் புத்தகத்தில், ரில்வின் சில்வா மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியில் இருந்தபோது கட்சியின் செயற்குழுவுக்கு முன்வைத்த கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் ஆகியனவும் இணைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் தனது புலமைச் சொத்துரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி ரில்வின் சில்வா தொடர்ந்த வழக்கை விசாரணை செய்த கொழும்பு வணிக மேல் நீதிமன்றம், இந்தப் புத்தகத்தின் உண்மையான உரிமை ரில்வின் சில்வாவுக்கே உரியது என 2019 ஜனவரியில் தீர்ப்பளித்து, நஷ்ட ஈடு செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது.

குறித்த தீர்ப்புக்கு எதிராக விமல் வீரவன்ஸ தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை நிராகரித்த நீதிபதி ஷிரான் குணரத்ன, கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் இழப்பீடு செலுத்துமாறு தெரிவித்த உத்தரவில், மேன் முறையீட்டு நீதிமன்றம் தலையிடாது என தனது தீர்மானத்தை அறிவித்துள்ளார். (ச-இ)

### சுற்றுலாத்துறையை மேம்படுத்த

# விளம்பரத் தூதுவர் திட்டம் 9 நாடுகளில் அறிமுகம்

கொழும்பு,ஜூலை 11

இலங்கையின் சுற்றுலாத்துறையை அடுத்த கட்டத்துக்கு முன்னேற்றும் நோக்கில், டிஜிற்றல் மற்றும் மக்கள் தொடர்பு வழியிலான புதிய விசேட விளம்பரத் தூதுவர் திட்டம் உலகளாவிய ரீதியில் ஒன்பது நாடுகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் புத்திக ஹேவவன்சம் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய விளம்பர முறைகளுக்குப் புறம்பாக, தற்காலத்திற்குப் பொருத்தமான டிஜிற்றல் ஊடகக் கட்டமைப்புகள் மற்றும் மக்கள் தொடர்பு உத்திகளைப் பயன்படுத்தி இந்த விளம்பரப் பணிகள் சர்வதேச மட்டத்திலே முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான சர்வதேச அங்கீகாரம் அதிகரிப்பதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை அதிகளவில் ஈட்டிக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# சமுர்த்திக் குடும்ப இளைஞர்களுக்கு சுற்றுலாத்துறையில் வேலைவாய்ப்பு

கொழும்பு,ஜூலை 11

நாட்டின் சுற்றுலாத்துறையில் மனித வள மேம்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில், சுற்றுலாத்துறை அமைச்சும் சமுர்த்தி திணைக்களமும் இணைந்து ‘சத்காரிய ஸ்ரமசேனா’ என்ற புதிய விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் மற்றும் யுவதிகளுக்குச் சுற்றுலாத்துறைக்குத் தேவையான உலகளாவிய தரத்திலான தொழில்முறைப் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் அவர்களுக்குச் சுற்றுலாத் துறையிலுள்ள பல்வேறு பிரிவுகளில் நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்குரிய முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்தார். (ச-இ)

# சுரேஷ் சாலேவுக்கு ஆதரவான மனுக்கள் ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தம்மைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கு எதிராக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலே தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவுக்கு ஆதரவு தெரிவித்து சமர்ப்பணங்களை முன்வைக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து இடைக்கால மனுக்களையும் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு அழைக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பெங்கமுவே நாலக தேரர், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் குணதாச அமரசேகர உள்ளிட்ட சில தரப்பினரால் இந்த இடைக்கால மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா மருத்துவமனையில் குருதிக்குக் கடும் தட்டுப்பாடு

## அவசர உதவி கோருகிறது இரத்த வங்கி!

**யாழ்ப்பாணம்,ஜூலை 11**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் குருதி இருப்பு குறைவடைந்து, கடும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்தவங்கிப் பிரிவினர் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் பாதுகாப்பாக இருக்க வேண்டிய குறைந்தபட்ச குருதி இருப்பு 330 பைந்துகளாகும். ஆனால், தற்போது 192 பைந்துகள் மட்டுமே கையிருப்பில் உள்ளன. இது மிகவும் கவலைக்கிடமான நிலையாகும்.

தொடர்ச்சியாகக் குருதிக் கொடை முகாம்கள் நடத்தப்பட்டாலும், நோயாளர்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதால், அரச அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள், சமூகத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், நலன் விரும்பிகள் மற்றும் முகாம் ஏற்பாட்டாளர்கள் தத்தமது பகுதிகளில் குருதிக்கொடை முகாம்களை ஏற்பாடு செய்து அறிவித்தால் மருத்துவமனைக் குழுவினர் அந்த இடத்துக்கு நேரடியாக வருகை தந்து குருதியைச் சேகரிக்கத் தயாராக உள்ளனர். பொதுமக்கள் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு நேரடியாகவும் வருகைதர முடியும். குருதிக்கொடை வழங்கி, உயிர்களைக் காக்கும் இந்த உன்னதப் பணியில் பங்கெடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-66)




# சுப்பிரமணி போகுதெண்டு...!

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை போடுற வேலை எல்லாத்துக்கும் சரியா வராது. எங்கட ஆக்களுக்கு ஆரும் ஒரு வேலையை செய்து முன்னுக்கு வந்தாலோ இல்லாட்டி ஏதும் புதுசா ஒண்டைச் செய்து பேமஸானாலோ பொறுக்காது. உடனேயே தாங்களும் அப்பிடியே கொப்பியடிக்க வெளிக்கிட்டிடுவினம். எல்லா மாடும் ஓடுதெண்டு கந்தரின்ர பேத்தைக் கண்டும் ஓடின கதைமாதிரியோ இல்லாட்டி கானமயிலாடக் கண்ட வான்கோழி மாதிரியோ அதெல்லாம் படுகேவலமா மாறிடும். இப்ப அதுதான் சுப்பிரமணி விசயத்திலையும் நடக்குது. கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை வெளிக்கிட்டவையோட முல்லைத்தீவில இருந்து ஒரு நாயும் யாத்திரை போகத்தொடங்கினது. அதுக்கு யாத்திரைக்காரர் சாப்பாடு போட, அவையோடையே ஒட்டிக்கொண்டு எல்லாருக்கும் முன்னால அந்த நாய் வழிகாட்டி மாதிரி 400 மைலுக்கும் மேல நடந்து போனது. அந்த நாய்க்கு யாத்திரைக்காரர் சுப்பிரமணி எண்டு பேரும் வைச்சு, கழுத்தில பட்டும் கட்டி அதையொரு கடவுள் மாதிரி நினைச்சுக் கூட்டிக்கொண்டு போற விசயம் மீடியாக்கள் மூலம் பரவத் தொடங்கிட்டுது.

இது பத்தாது எண்டு கல்முனையில சுப்பிரமணியை ஒரு முஸ்லிம் பெடியன் காலால எட்டி உதைஞ்ச விசயம் பரபரப்பா எல்லா இடமும் தெரிஞ்சதும், சுப்பிரமணிக்கு இன்னும் மவுசு கூடிட்டுது. வழக்கமா கதிர்காம யாத்திரை போறவையை ஆரும் ஆர்வமாப் பாக்கமாட்டினம். ஆனால் இந்தமுறை கதிர்காம யாத்திரை போனவைக்கு எல்லா இடமும் கடும் வரவேற்பு. எல்லா இடத்திலையும் சுப்பிரமணியைப் பாக்கவும், அதுக்குச் சாப்பாடு போடவும், செல்பி எடுக்கவும் சனங்கள் போட்டி போடத்தொடங்கிட்டினம். சுப்பிரமணியை ஸ்ரூடியோ வுக்கு கூப்பிட்டு, அதைவைச்சு பேட்டியெடுக்கிற அளவுக்கு அதின்ர புகழ் பட்டிதொட்டியெல்லாம் பட்டையைக் கிளப்பி, கடைசியில தனி வாகனத்தில காட்டைக் கடந்து கதிர்காமத்துக்கும் சுப்பிரமணி போட்டுது.

இப்பிடி ஒரு சுப்பிரமணி பேமஸானவுடன மற்றவை சும்மா இருப்பினமோ. கதிர்காமத்துக்கு இப்ப யாத்திரை வெளிக்கிட மற்ற ஆக்களும் தங்களோட ஒவ்வொரு நாயளைக் கொண்டு வெளிக்கிட்டிட்டினமாம். அதில ஒண்டுக்குப் பேர் 'எட்டியாந்தோட்டை வைரவர்'. அந்த நாய்க்கும் சுப்பிரமணி மாதிரியே கழுத்தில பட்டுத்துணியெல்லாம் கட்டி,வெளிக்கிடுத்தி கூட்டிக்கொண்டு வருகினம். இயல்பா ஒரு விசயம் நடக்கிறதுக்கும்,, அதை மாதிரி வலிஞ்சு செய்யிறதுக்கும் கனக்க வித்தியாசம் இருக்கெல்லோ. அது சனத்துக்கும் தெரியும். நாயை வைச்சு தாங்கள் பேமஸாகிறதுக்குத்தான் இப்பிடிச் சுப்பிரமணிக்குப் போட்டியா வேற ஆக்களும் நாயளோட யாத்திரை போகினமாம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சுதான். ஒரு சுப்பிரமணியை சனம் ரசிச்சுது.கும்பிட்டுது. அதைவைச்சுக் கொண்டு எல்லா நாயையும் சனம் ரசிக்கும், கும்பிடும், பேமஸாக்கும் எண்டு நினைச்சால் அம்போதான். இவையின்ர அலப்பறையள் கூடிக்கொண்டே போனால், இனிமேல் கதிர்காம யாத்திரையில நாயளைக் கூட்டிக்கொண்டு போகத் தடை எண்ட அறிவிப்பு வந்தாலும் அதிசயமில்லை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

### சாவகச்சேரியில்

# நகைக்கடை உரிமையாளர் வீட்டில் நகை,பணம் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை 11

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள நகை விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள், அங்கிருந்த தாலிக்கொடி, சங்கிலி மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை நடந்துள்ளது.

வீட்டிலிருந்த சிறுமி ஒருவர், திருடர்களின் நடமாட்டத்தைக் கண்டு சத்தம் எழுப்பியநிலையில் திருடர்கள் அங்கிருந்து மதில் பாய்ந்து தப்பியோடியுள்ளனர். சுமார் 17 பவுண் நகையே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக நகைக்கடை உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டுக்கமைய தடயவியல் பொலிஸார் உட்படப் பாதுகாப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-9)

# அரசு சேவை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர், உறுப்பினர்கள்!

கொழும்பு,ஜூலை 11

அரசு சேவை ஆணைக்குழுவின் புதிய தலைவராக எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் ஏனைய உறுப்பினர்களாக பி. சனத் பூஜித, ஈ. ஆர். வீரகோன், ரூபவதி கேதீஸ்வரன், ஜே. எம். ஆர். ஜெயசுந்தர, ஈ. ஏ. பி. என். எதிரிசிங்க, மருத்துவர் எஸ். ஏ. ஏ. என். ஜெயசேகர மற்றும் எம். எச். முகமதுசமீல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்களை, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஜனாதிபதி செயலகத்தில் வைத்து புதிய உறுப்பினர்களிடம் கையளித்தார்.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவையில் 32 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட மூத்த அரச அதிகாரியாக இருந்த ரூபவதி கேதீஸ்வரன், நீண்டகாலமாக கிளிநொச்சி மாவட்டத்தின் செயலாளராக சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# துஷ்பிரயோக குற்றச்சாட்டில் நகரசபை உறுப்பினர் கைது



மட்டக்களப்பு,ஜூலை 11

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் காத்தான்குடி நகரசபைக்கு தேசிய பட்டியல் ஊடாக உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ள நகரசபை உறுப்பினர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் காத்தான்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் விடுதியில் பணியாற்றி வந்த 21 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தலைமறைவான தவிசாளர் கைது

கொழும்பு,ஜூலை 11

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு நீதிமன்றத்தால் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் தலைமறைவாக இருந்த பாதஹேவாஹெட்ட பிரதேசசபையின் தவிசாளர், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்ததைத் தொடர்ந்து, அவர் வசித்து வந்த கண்டி, மாரஸ்ஸன பகுதியை விட்டு வெளியேறி தலைமறைவாக இருந்தநிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

11.07.2026 சனிக்கிழமை

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனு சரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

**மிதுனம்:** திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டாகும். புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** உடல் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். குடும்பப் பெரியவர்களிடம் பேசும்போது வார்த்தைகளில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். ஆனாலும், வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.


# கலாநேத்ரா விருதுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா,ஜூலை 11

வவுனியா பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலாசார விழாவில் வழங்கப்படவுள்ள கலாநேத்ரா 2026 விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன், 25 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இம்முறை சிறுகதை, கவிதை, நாவல், நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை),சிற்பம், ஓவியம், நடனம், வாத்திய இசை (வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன),வாத்தியக் கருவிகள் உருவாக்கம், ஒப்பனைக்கலை,கூத்து, கிராமிய கலைகள் குறும்படம்,ஓவியம், சிற்பம்,நடனம், ஆகிய துறைகளுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)



# கூட்டுறவாளர்களிடையே விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

104 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில், கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக் கிழமை ஆரம்பமானது. மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். (க-25)

**வீடு விற்பனைக்கு**

3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையில் 1 1/2 பரப்புக் காணி. கிணறு வீட்டுடன் சிவன் கோவிலிருந்து 300m தூரத்தில் Tower க்கு அருகில் உடனடி விற்பனைக்கு உண்டு. 85 இலட்சம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 651 1746/077 615 8906

V.Vasudevan, 7B, Sri Wijaya Road,

(CR021) A

**காணி விற்பனைக்கு**

* இடம் : செழியன் வீதி, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்
* யாழ். நகர் மத்தியில் இருந்து 1 1/2 KM தூரத்தில் உள்ளது.
* 14 பரப்பு அளவுடையது.
* பிரித்தும் வழங்கப்படும்.
* நல்ல அயல் சூழல்
* பரப்பு ஒன்றின் விலை - 18 இலட்சம்

தொடர்புகளுக்கு:077 9162 326
076 6690 996

(CS 32122) A



104ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், கூட்டுறவுக் கொடி ஏற்றப்பட்டதோடு, மரநடுகையும் இடம்பெற்றது. (க-25)

# செம்மணிப்புதைகுழி தொடர்பில் இணையவழிக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

அரசியல் பேசும் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் 'செம்மணிப் புதைகுழி நடப்பது என்ன?' எனும் தலைப்பிலான இணையவழியிலான கருத்துரையும் கலந்துரையாடலும் இன்று சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளரான மருத்துவர் உதயசீலன் கற்கண்டு கலந்துகொண்டு கருத்துரை ஆற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும். குறித்த நிகழ்வில் *Meeting ID:* **971 4558 8344**, *Passcode: politics* எனும் இணைப்பினூடாக இணைந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)

**31ஆம் நாள் நினைவு அஞ்சலி**



திருமதி புவனேஸ்வரி கந்தையா
(ஊரெழு)
(ஓய்வுபெற்ற ஆசிரியை- உரும்பிராய் இந்துக் கல்லூரி)

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
உற்றார் உறவினர்கள்

மகேஸ்வரன் (கண்ணன்)
Tel: 077 376 3434

(CS 32120) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# ‘பெயிலாகும்’ ரயில்கள்..!

நாடளாவிய ரீதியில் ரயில் சேவைகளை மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றது திசைகாட்டி அரசாங்கம். ரயில் பெட்டிகளின்மை மற்றும் இதர வளப்பற்றாக்குறைகள் உள்ளிட்ட பல காரணங்களைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பொதுப்போக்குவரத்துக் கட்டமைப்பை விரிவுபடுத்துமாறு பல்வேறு தரப்பினர் காலாகாலமாக வலியுறுத்திவரும் நிலையில், ரயில் சேவைகளை மேலும் குறைப்பது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள முடிவு உண்மையில் அபத்தமானது. அத்துடன், இந்த நாட்டின் போக்குவரத்தில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் இது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தவல்லது.

அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது போக்குவரத்துத் திட்டத்தில் ரயில் போக்குவரத்துக்கே எப்போதும் முதலிடம் கொடுத்து வருகின்றன. ரயில் போக்குவரத்தை மேம்படுத்தினால் வீதிகளில் வாகன நெரிசல் குறையும், போக்குவரத்துக்காகச் செலவிடப்படும் தேசிய செலவினம் கட்டுக்குள் வரும், கார்பன் வெளியேற்றம் குறைக்கப்பட்டு சூழலியல் பாதிப்பு தவிர்க்கப்படும், எரிபொருளை மையப்படுத்தி ஏற்படும் நெருக்கடிகள் இல்லாமல் போகும். ஆக, ரயில் சேவையை மேம்படுத்துவது என்பது அந்த நாட்டின் வளர்ச்சியுடன் மட்டும் நேரடித் தொடர்புடைய விடயமல்ல. மாறாக அதில் சூழலியல் உட்பட ஏராளமான காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் இலங்கை இதில் விதிவிலக்காகவே செயற்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை ரயில் கட்டமைப்பு என்பது சபிக்கப்பட்ட துறையாகவே நீண்ட காலமாக இருந்து வருகின்றது. வளப்பற்றாக் குறையால் ரயில் கட்டமைப்பு முடங்குவதும், பின்னர் இந்தியா கைகொடுப்பதும்தான் தொடர்கதை. ரயில் சேவையில் பற்றாக்குறை மட்டுமே நிரந்தரமான விடயமாக மாறிவிட்டது. மாறாக, ரயில் போக்குவரத்தை அடுத்த கட்டத்தை நோக்கி எடுத்துச் செல்வதற்கு இதுவரை இருந்த அரசாங்கங்களும், தற்போதைய அரசாங்கமும் காத்திரமான நகர்வை எடுப்பதாக இல்லை. இலங்கையின் சுற்றுலாத்துறையில் ரயில் போக்குவரத்துக்குத் தவிர்க்க முடியாத இடமுண்டு. எனவே, ரயில் போக்குவரத்து என்றால் அது இலங்கைதான் என்ற உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டிய எமது நாடு, இன்று அத்தகைய நிலையில் இருக்கின்றதா? என்ற பரிசீலனை அவசியமாகின்றது.

ஏனைய நாடுகளில் ரயில்கள் எனப்படுபவை வெறுமனே போக்குவரத்துடன் தொடர்புடைய விடயம். ஆனால் இலங்கையில் அவை நாட்டின் பொருளாதாரத்துடன் இரண்டறக் கலந்த இயந்திரங்கள். எனவே, அதை மேம்படுத்தவும் வளப்படுத்தவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அத்துடன், உலகளாவிய நெருக்கடியால் பாதிக்கப்படும் நாடு என்ற வகையிலும், பொருளாதாரத்தில் அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு எத்தனிக்கும் தேசம் என்ற ரீதியிலும் ரயில் போக்குவரத்தை ஒரு பிரதான உத்தியாகக் கைக்கொள்ள வேண்டியது மிக அவசியம். எனவே, இந்தத் தவிர்க்க முடியாத தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப கொள்கையை வகுக்கவும், செயற்படவும் திசைகாட்டி அரசாங்கம் முன்வரவேண்டும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்**

**பொருள்:** பொறாமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத் தக்கவை.




# கண்காணிப்பு வளையத்தில் திடீர்ப் பணக்காரர்கள்

கொழும்பு,ஜூலை 11

**சட்டபூர்வமான வருமான வழிமுறைகள் ஏதுமின்றி, திடீரென ஈட்டப்பட்ட பெருமளவிலான சொத்துகள் மற்றும் ஆடம்பர வாழ்க்கைமுறையைக் கொண்டுள்ள நபர்கள் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர அவதானம் செலுத்தி வருவதாக இலங்கைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத வழிகளில் ஈட்டப்பட்ட சொத்துகள் மற்றும் சட்டவிரோத சொத்துக் குவிப்புகள் தொடர்பான விசாரணைகள் தற்போது நாடு முழுவதும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமூகத்தின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு, இது போன்ற சந்தேகத்துக்கிடமான செயற்பாடுகள் குறித்து தங்களுக்குத் தகவல் தெரிவிக்குமாறும் பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-இ)



## நீரில் மூழ்கி சிறுவன் சாவு

மட்டக்களப்பு,ஜூலை 11

வாழைச்சேனை- ஹைராத் ஆற்றங்கரைப் பகுதியில் 7 வயதுடைய சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குடும்ப உறவினர்களுடன் ஆற்றங்கரைப் பகுதியூடாகச் சென்ற போது சிறுவன் வழிதவறிச்சென்றுள்ளார். காணாமற்போன சிறுவனைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் சிறுவன் ஆற்றில் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ச-இ)

## தங்கம் கடத்திய வர்த்தகர் கைது!

கொழும்பு,ஜூலை 11

நாட்டுக்குள் 11,885,514 ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்த முயன்ற வர்த்தகர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரால் கொண்டு வரப்பட்ட பைகளிலிருந்து 271 கிராம் மற்றும் 480 மில்லி கிராம் நிறையுடைய 12 தங்கச் சங்கிலிகள், 10 தங்கக் கைக்காப்புகள் மற்றும் 2 தங்கக் கட்டிகள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## பிரபல பாடகி மரியசெல் மறைவு



கொழும்பு,ஜூலை 11

இலங்கையின் பிரபல பாடகி மரியசெல் குணதிலக்க தனது 68ஆவது வயதில் நேற்றுக் காலமானார். அவர் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் காலமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## நடப்பாண்டில் சுற்றுலாவிகள் வருகையால் 1.5 பில்லியன் வருமானம்!

கொழும்பு,ஜூலை 11

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை இலங்கை ஈட்டியுள்ளது என்று சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தை நெருங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை-ஆனி 24

12.07.2026

சுபநேரம் : 08.59 – 10.29

ராகுகாலம் : 04.29 – 05.59


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு, கிழக்கு மக்கள் வாழ்வாதாரத்தை நிதி தூயதாக்கல் தடைச் சட்டம் பாதிக்கும்!



## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு,ஜூலை 11**

**பணம் தூயதாக்கல் தடைச்சட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் சிவில் அமைப்புகளையும், அவற்றின் மூலம் உதவிகளைப் பெறும் சாதாரண ஏழைமக்களையுமே பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பணமோசடியையும் பயங்கரவாத நிதியளிப்பையும் தடுப்பது மற்றும் சர்வதேச நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் தரநிலைகளுக்கு இணங்குவது இலங்கையின் சர்வதேசக் கடமையாகும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. அதனை நடைமுறைப்படுத்தத் தவறினால் சர்வதேச நிதி அமைப்பில் நாட்டின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டு, வெளிநாட்டுக் கடன்களுக்கான செலவு அதிகரிக்கும். அதன் இறுதிச் சுமையை மக்களே சுமக்க நேரிடும்.

சர்வதேச விதிகளானது அனைத்துச் சிவில் சமூக அமைப்புகளையும் பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதவோ அல்லது பொதுவான கட்டுப்பாடுகளை விதிக்கவோ கூறவில்லை. ஆனால், இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் மனிதாபிமான, மனித உரிமை மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் அமைப்புகள் எவ்வித ஆதாரமுமின்றி வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ச்சியான கண்காணிப்புக்கும் விசாரணைக்கும் உள்ளாக்கப்படுகின்றன. சிவில் அமைப்புகள் வெளிநாட்டு நிதியைப் பெறுவதிலும் வங்கிக் கணக்குகளைத் திறப்பதிலும் கடுமையான தடைகளைச் சந்திக்கின்றன. இதனால் வாழ்வாதார உதவிக்காகக் காத்திருக்கும் விவசாயிகள், கல்வி உதவிபெறும் மாணவர்கள், சட்ட உதவி மற்றும் மனநல ஆலோசனைச் சேவைகளை எதிர்பார்க்கும் சாதாரண பொதுமக்களே நேரடியாகப் பாதிக்கப்படுவர்.

பல ஆண்டுகால இடப்பெயர்வு மற்றும் வறுமை காரணமாக ஆவணங்களை இழந்த பெண் தலைமையிலான குடும்பங்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் கடன் வழங்கும் கிராமப்புற நிதி நிறுவனங்கள், இந்தச் சட்டங்களின் கடுமையான தண்டனைகளுக்கு அஞ்சி கடன் வழங்குவதைத் தவிர்க்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நிதி முறைகேடுகளை அம்பலப்படுத்தும் புலனாய்வு ஊடகவியலாளர்களின் கணினி மற்றும் கைப்பேசித் தரவுகளை, அவர்கள் அறியாமலேயே விசாரணை அதிகாரிகள் அணுக இந்தச்சட்டம் வழிவகுக்கிறது.

எனவே, இந்தச் சட்டத்தை அரசாங்கம் மீண்டும் மீளாய்வுசெய்து, அவை ஜனநாயகச் சுதந்திரங்களையும், அரசியலமைப்பு உரிமைகளையும், நீதித்துறையின் மேற்பார்வையையும் உறுதிப்படுத்துவதை நாடாளுமன்றம் பாதுகாக்க வேண்டும் - என்றார். (ச-இ)



விசேட தேவை அலகு மாணவர்களுக்கான, வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (க)



## றேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி ஐக்கிய வி.கழகம் இறுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 11

40 வயதுக்கு மேற்பட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், றேஞ்சர்ஸ் வி.கழக அணியை வீழ்த்தி, ஐக்கிய விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

க.சொக்கன் ஞாபகார்த்தமாக அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி, கடந்த மாதம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றது.

குறித்த போட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியுடன், ஐக்கிய விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

ஐக்கிய விளையாட்டுக் கழக அணி சார்பில் யோகன் 2 கோல்களையும், மயூரன், மனோ மற்றும் அனுராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் அடித்திருந்தனர். பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வீரர் யோகன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார். (க-100)




## கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப்பாதை திறக்கப்பட்டது


அம்பாறை, ஜூலை 11

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு பாதயாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களின் நலன்கருதி உகந்தை மலை குமண தேசிய பூங்காவினூ டான காட்டுப்பாதை நேற்று வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் 'அரோகரா' கோஷத்துடன் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரலாற்றுச் சிறப்புமிக்க உகந்தைமலை முருகன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து, வழிபாடுகளில் கலந்துகொண்ட அதிதிகளால் உகந்தை மலை குமண தேசிய பூங்காவினூடான காட்டுப்பாதை பக்தர்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது. (ச-இ-66)

வேல்ட்விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன், செம்முகம் அரங்காற்றுகைக் குழுவினரால் போசாக்கான உணவுப் பழக்கம் தொடர்பான நாடக ஆற்றுகை, வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (க-159)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்–நினோ வறட்சி அச்சுறுத்தல் நீர் முகாமைக்குப் பொறிமுறை

கொழும்பு,ஜூலை 11

எல்-நினோ காலநிலை மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, நாட்டின் நீர் முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதற்கென நீர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கூட்டமைப்புப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் காலநிலை சவால்களை எதிர்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வழக்கமாக ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் உலர்ந்த கால நிலையே நிலவும். எனினும், எல் – நினோ தாக்கம் காரணமாக இந்த வருடம் வறட்சி நிலைமை மேலும் தீவிரமடையக்கூடும்.

செப்ரெம்பர் மாத மத்தியில் வடகீழ் பருவமழை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அந்த மாதத்தில் மழைவீழ்ச்சி வழமையை விடக் குறைவாகவே இருக்கும்.

ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என வானிலை முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

நிலவப்போகும் காலநிலையை எதிர்கொள்ளும் வகையில் விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை மற்றும் மின்சாரச்சபை அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, அனைத்து நிறுவனங்களும் தமது துறை சார்ந்த வறட்சிப் பதிலளிப்புத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, குறித்த திட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் 20 ஆம் திகதி மீண்டும் விரிவாக மீளாய்வு செய்யப்படவுள்ளன - என்றார். (ச-இ)



## நீர்கொழும்பு சிறை மோதல்; எதிர்க்கட்சிக்கு அரசியல் தீனி

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 11

நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் குறுகிய அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவிக்கையில், ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிடுகிறார். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் 2026 ஆம் ஆண்டு முன்னேற்றமடைந்துள்ளது. பொருளாதார ஸ்திரமடைந்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் சான்றிழித்துள்ளது. இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடு என்று உலக வங்கி அறிவித்துள்ளது. ஆனால் எதிர்கட்சியினர் மாத்திரம் தான் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். 27 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்று எதிர்க்கட்சியினர் மகிழ்வுடன் பேசுகிறார்கள். இது முற்றிலும் தவறானது - என்றார். (ச-இ)



## நீர்கொழும்பு சிறை வன்முறை அரசாங்கமே முழுப்பொறுப்பு

### சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 11

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்துக்கு தற்போதைய அரசாங்கமும், அதன் நீதி அமைச்சருமே முழுப்பொறுப்புக் கூற வேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த சம்பவத்தில் ஆரம்பத்தில் இரண்டு கைதிகள் உயிரிழந்தபோது, அதுகுறித்து ஊடகங்கள் கேள்வி எழுப்பிய வேளையில், தமக்கு எதுவும் தெரியாது என்றும் தாம் சமூக வலைத்தளங்களைக்கூட பாக்கவில்லை என்றும் நீதி அமைச்சர் மிகவும் அலட்சியமாகவும் ஏளனமாகவும் பதிலளித்திருந்தார்.

சம்பவ இடமங்குமகங்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் அமைச்சர் பல மணிநேரம் மறைந்திருந்தமை, அவரது இத்தகைய பொறுப்பற்ற தன்மையின் காரணமாகவே அடுத்த சில மணித்தியாலங்களில் மோதல் தீவிரமடைந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்தது.

அரசாங்கம் அரசியல் ரீதியாக இந்த மரணங்களுக்குப் பொறுப்பேற்பதாகக் கூறினாலும், அதனால் உயிரிழந்தவர்களின் உயிர்களைத் திரும்பப் பெறமுடியாது என்பதால் வெறுமனே பொறுப்பேற்பதாகக் கூறுவதில் எந்தப் பயனும் இல்லை. நாட்டின் சிறைச்சாலைக் கட்டமைப்பு தற்போது முற்றிலும் சீர்குலைந்துள்ளது- என்றார். (ச-இ)

## நீர்கொழும்பு சிறை வன்முறை; பின்னணியில் சுயநல அரசியல்

### கூறுகிறார் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு,ஜூலை 11

நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவத்துக்குப் பின்னால், சுயநலமிக்க அரசியல்வாதிகள் இருக்கலாம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,


நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகும். கடந்த கால ஆட்சியாளர்களே இப்படியான கலாசாரத்தைக் கொண்டு வந்தனர். 1983ஆம் ஆண்டில் குட்டிமணி உட்பட 53 தமிழ்க்கைதிகள் இரண்டு நாள்களாகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இதன் பின்னணியில் அரசியல்வாதிகள் இருந்தனர். நாம் தற்போது அரசியல் ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றோம். ஆனாலும், சுயநலமிக்க அரசியல்வாதிகள் பழைய கலாசாரத்தையே விரும்புகின்ற னர். நீர்கொழும்பு சம்பவம் அதன் ஓர் அங்கமா என்ற சந்தேகமும் எழுகின்றது. எமது ஆட்சியில் நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் போன்றதொரு சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடாது. இனிவரும் காலங்களில் அவ்வாறான சம்பவங்களுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். தற்போது நாடு தழுவிய ரீதியில் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது - என்றார். (க-26)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 11

யாழ்.திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தின் தேவி திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க)



# வாகன இலக்கத் தகடு அச்சிடலில் புதிய வாகனங்களுக்கு முன்னுரிமை

கொழும்பு,ஜூலை 11

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் மற்றும் விநியோகிக்கும் பணிகளில் புதிய வாகனப் பதிவுகளுக்கு முதலிடம் வழங்கி முன்னுரிமை அளிக்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் ஓராண்டு கால இடைநிறுத்தத்துக்குப் பின்னர், வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் கடந்த ஜூன் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிலவிய தற்காலிக இடைநிறுத்தம் காரணமாக, நாடு முழுவதும் சுமார் ஒரு மில்லியன் வாகன இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட வேண்டிய நிலையில் நிலுவையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலுவையை விரைவாக நிவர்த்தி செய்வதற்கும், எதிர்காலத்தில் இலக்கத் தகடுகளை எவ்விதத் தடையுமின்றி விநியோகிப்பதற்கும் தனியார் நிறுவனம் ஒன்றுடன் 3 பில்லியன் ரூபா பெறுமதியான ஐந்தாண்டு ஒப்பந்தத்தை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருத்துவபீட பேராசிரியர் சி. ரகுராமனுடன் 'கிளி மக்கள் அமைப்பு' கலந்துரையாடல்!

கொழும்பு,ஜூலை 11



பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியருமான சிவலிங்கராஜா ரகுராமனுக்கும், 'கிளி மக்கள் அமைப்பினருக்கும்' இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் லண்டனில் இடம்பெற்றது.

இலங்கையிலேயே அரச பொது மருத்துவமனை ஒன்றின் கீழ் இயங்கும், முதலாவது முற்றிலும் இலவசமான செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இயங்கி வருகின்றது.

பேராசிரியர் சிவலிங்கராஜா ரகுராமன் தலைமையிலான யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட துறைசார் குழுவினரும், கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவக் குழுவினரும் இணைந்து கடந்த ஜூன் மாத முதல் இந்தச் செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்தினை செயற்படுத்தி வருகின்றனர்.

வறிய மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் பலருக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ள இந்தப் பணியில் பங்கேற்கும் பேராசிரியர் ரகுராமன் உள்ளிட்ட அனைத்து மருத்துவக் குழுவினருக்கும் 'கிளி மக்கள் அமைப்பினர்' தங்களது மனமார்ந்த நன்றிகளையும் மகிழ்ச்சியையும் இதன்போது பகிர்ந்துகொண்டனர். கிளி மக்கள் அமைப்பின் தலைவர் சிவலிங்கம் துறைவன் தலைமையில், அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் மருத்துவ நிபுணருமான ரத்னம் சதானந்தனின் சிறப்பு ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. (ச)

# விளையாட்டுப் போட்டி

வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கிடையிலான மாகாண விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

**தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம்**
**துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச்செவ்வாய் திருவிழாவிற்கான**
**தற்காலிக கடை அமைத்தலுக்கான ஏலம்.**

மேற்படி தற்காலிக கடை ஏலம் நாளை ஞாயிற்றுக்கிழமை 12.07.2026 அன்று மாலை 2.30 மணியளவில் துர்க்காதேவி தேவஸ்தான முன்றலிலுள்ள சங்க வளாகத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தற்காலிக கடை ஏலம் எடுப்பவர்களை அழைத்து நிற்கின்றோம்.
குறிப்பு:- கடை ஏலம் எடுப்பவர்கள் அன்றையதினமே ஏலத் தொகையினை செலுத்த வேண்டும்.
மேலதிக தகவல்களுக்கு:- 077 027 9693, 075 729 4697
- இணைச் செயலாளர்
(CS/61846) J-1

## பணியாளர் தேவை

இளவாலையில் வாழும் சுயமாக
இயங்கக்கூடிய நிலையில் உள்ள
வயோதிபத் தம்பதியினரை
பராமரிக்கவும், இதர வீட்டுப் பணிகளில்
உதவவும் பெண் பணியாளர்
தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 025 2184
(cr. 011) (N-1)

## பணியாளர் தேவை

பண்டத்தரிப்பு, விளான் பகுதியிலுள்ள மாந்தோட்டத்திற்கு
(மாமரம்) விவசாய அனுபவமுள்ள பணியாளர் தேவை.
தங்குமிட வசதியும் அதிகூடிய சம்பளமும்
பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 704 0356
(CS/61848) J-1

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், புத்தூர், நவக்கிரிப் பகுதியில்**
**05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

நிலாவரைக்கிணறு முன்பக்க வீதியில் - எல்லாளன் வாசிகசாலைக்கு அருகில்

- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் உகந்த நிலம்

விலை பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு - 021 222 2639

தலைவர்,
யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய
வங்கிகளின் சமாசம் வ.து
95, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(cr. 03) (N-1)

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி 2026/27

**காலம்**
நான்கு வருடங்கள்
**அனுமதித் தகைமைகள்**

அ) அனைத்து விண்ணப்பதாரிகளும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
அத்துடன்,

ஆ) க.பொ.த உயர் தரத்தில் தமிழ் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

இ) க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் "B" தரத்துடன் க.பொ.த உயர்தரத்தில் தமிழ்மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றி குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

ஈ) தேசிய கல்வியற் கல்லூரியில் தமிழ்மொழி கற்பித்தலில் தேசிய டிப்ளமோ சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

உ) இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் இணையான உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**யாருக்காக**

- தமிழ் மொழியை முதன் மொழியாக / தாய்மொழியாக /இரண்டாம் மொழியாகக் கற்பிக்க விரும்புவோர்.
- அரச / தனியார் பாடசாலைகளில் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பிரிவுகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்.
- தமிழ்மொழி கற்பித்தலில் அனுபவம் மிக்க தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருப்போர்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மற்றும் தமிழ்மொழிக் கற்பித்தலில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள்.
- தொழில் தகைமையுடன் கூடிய சிறப்புப் பட்டக் கற்கையை பூர்த்தி செய்ய விரும்புபவர்கள்.

தொடர்புகளுக்கு :
யாழ்ப்பாணப் பிராந்தியநிலையம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

021 222 3374
www.ou.ac.lk

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

## சேவைநலன் பாராட்டு




**சுன்னாகம் தபாலகத்தில் அஞ்சலராக**
**தன் பணியில் சிறப்புற 32 வருடங்கள் கடமையாற்றி**
**இன்று (11.07.2026) சனிக்கிழமை ஓய்வு பெறும்**

## நவரத்தினம் மதியாபரணம்

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை
பாராட்டுவதுடன் ஓய்வு காலம் மேலும் சிறப்புற
மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
**அஞ்சல் சமூகம், சுன்னாகம்.**
(CS61845) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
18
09
1942

உதிர்வு
09
07
2026

## திருமதி நகுலேஸ்வரி சங்கரப்பிள்ளை

நெல்லியடியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த (09.07.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கார்த்திக் (லண்டன்) இன் அன்பு தாயாரும், சுபாங்கனி (லண்டன்) இன் அன்பு மாமியாரும், விமலேஸ்வரி (லண்டன்) இன் அன்பு சகோதரியும், நிதுன் (லண்டன்), அயன் (லண்டன்), ஆதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/32117) J-1

# கருத்தரங்கும் விரிவுரையும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நடத்தும் புராண படன கருத்தரங்கும், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நுட்ப விரிவுரையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வளவாளர்களாகத் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் , ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் செ.கந்தசத்தியதாசன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெச்சுமி, ஆகியோர் கலந்துகொள்வர். (க)

## பகிரங்க ஏல அறிவித்தல்
## வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மாகியப்பிட்டி பழைய கட்டடத்தினை இடித்து அகற்றலுக்கான பகிரங்க ஏல அறிவித்தல்.

இடம் : மாகியப்பிட்டி சந்தை
திகதி : 2026.07.17 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மு.ப.10.00 மணி

1. ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதியையும் கொண்டு வருவதுடன் கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான கட்டணங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.07.17 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் செலுத்திபற்றுச்சீட்டினை சமர்ப்பிக்க வேண்டும்.
2. ஆர்வமுள்ள ஏலதார்கள் 2026.07.11 ஆம் திகதியிலிருந்து 2026.07.17 ஆம் திகதி வரை ஏலம் சம்மந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212256651 இலக்க தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
3. தெரிவு செய்யப்பட்ட ஏலதாரர் 2026.07.17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்குள் ஏலத்தொகையினை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் முழுமையாக ஒரே தடவையில் காசாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று 2026.07.22 ம் திகதிக்குள் குறித்த கட்டடத்தினை அகற்றுதல் வேண்டும்

| விபரம் | மீளளிக்க கூடிய வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத வைப்பு தொகை | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| மாகியப்பிட்டி சந்தையின் 30' X 10' விஸ்தீரணம் கொண்ட பழைய கட்டடத்தின் நில மட்டத்தின் மேல் பகுதி | 5,000.00 | 1,000.00 | 40,100.00 |

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். 11.07.2026

(Cr 013 ) N-

# மரண அறிவித்தல்



மலர்வு
19
12
1936

உதர்வு
07
07
2026

## பாலசிங்கம் மகேஸ்வரி

மாலியவத்தை சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி அவர்கள் கடந்த 07.07.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சங்கரத்தையை பிறப்பிடமாக கொண்ட காலஞ்சென்ற பொன்னையா பாலசிங்கம் (இளைப்பாறிய குடிவரவு, குடியகல்வு அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி (இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி), சண்முக சுந்தரம் (கணக்காளர் - அமெரிக்கா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கமலாதேவி (Civil Service-லண்டன்), சரோஜினிதேவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கமலர், Dr.சரோஜாதேவி (அமெரிக்கா), ராஜேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற Eng ஸ்ரீவிக்னராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவகுமாரன் (லண்டன்), நந்தகுமாரன் (Canada Post), ஸ்கந்தகுமாரன் (Fund Accountant Canada), சூரியகுமாரன் (லண்டன்), கலாநிதி சியாமளா (சிரேஷ்ட விரிவுரைாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.சந்திரிகா (லண்டன்), தயாளினி (Dental Assistant - Canada), கல்யாணி (கனடா), கணணா, Eng. ஜெயகுமார் (விரிவுரையாளர், யாழ். உயர்தொழில்நுட்பக் கல்லூரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரபி, பைரவி, ஆரன், பிரிஷா, பவிக்கா, திவாஷா மற்றும் திவிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கலாவதி, கௌரி, காயத்திரி, கல்யாணி, கௌசல்யா, நிலா, கண்ணன், நளினா ஆகியோரின் பாசமிகு அத்தையும், புஸ்பா, அகிலா, சிவநீலன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாலியவத்தை,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32119) A

## யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் (JJCDR)
## பதவி வெற்றிடம் - சாரதி மற்றும் அலுவலக பராமரிப்பாளர் (Driver Cum Custodian)

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் (JJCDR) கீழ்க்காணும் பதவிக்காக தகுதியும் ஆர்வமும் உடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

**பதவி: சாரதி மற்றும் அலுவலக பராமரிப்பாளர் (Driver Cum Custodian)**

- அடிப்படைச் சம்பளம் மாதாந்தம் ரூ.37.800.00
- இலங்கையில் நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டங்கள் மற்றும் அரச விதி முறைகளின் படி EPF மற்றும் ETF பங்களிப்பு வழங்கப்படும்.
- ஆறு (06) மாத தகுதிகாண் காலத்திற்குட்பட்ட முழுநேர நியமனம்.

**தகைமைகள்:**

- **கல்வித் தகுதி:**- க.பொ.த.(சாதாரண தரம்) அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் (Driving License) இருக்கவேண்டும்.
- குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் வாகன ஓட்டுநராகப் பணியாற்றிய அனுபவம் இருக்கவேண்டும்.
- விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தில் விண்ணப்பதாரரின் வயது 30 முதல் 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு மருத்துவ ரீதியாக தகுதியானவராக இருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை உடையவராகவும். சாரதி மற்றும் அலுவலக பாதுகாப்பு கடமைகளை பொறுப்புடன் மேற்கொள்ளவும் தயாராக இருத்தல் வேண்டும்.
- கடுமையான போக்குவரத்து விதிமீறல்கள் அல்லது குற்றப்பதிவுகள் அற்ற வாகன ஓட்டுநர் பதிவைக் கொண்டிருக்க வேண்டும்.
- தமிழ் மொழியில் தொடர்பாடல் திறன் அவசியம். சிங்களம் மற்றும் ஆங்கில அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
- தேவைக்கேற்ப அலுவலக நேரத்திற்கு அப்பாலும் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு, பதவிக்கான விரிவான பணிப் பொறுப்புக்கள் (Terms of Reference - TOR) நேர்முகத் தேர்வின் போது வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது விரிவான சுயவிவரம் (Curriculum Vitae) தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர்கள் அல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ, நேரடியாகக் கையளித்தோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பலாம். விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி **30 July 2026**

**செயலாளர்.**
**யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையம் (JJCDR)**
**இல.19/3, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**
**Email : jaipurjjcdr1@gmail.com**

பொருத்தமான விண்ணப்பங்கள் போதுமான அளவில் கிடைக்கப்பெற்றால் அறிவிக்கப்பட்ட முடிவுத் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களைத் தெரிவு செய்து ஆட்சேர்ப்பு செயல்முறையை நிறைவு செய்யும் உரிமை JJCDR-க்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCIES

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

**Basic requirements:**

- Having passed the G.C.E. Ordinary Level Examination in six (06) subjects with at least three (03) Credit passes, including English, Tamil, and Mathematics.

**AND**

- Having passed the G.C.E. Advanced Level Examination in any stream.

➤ **Management Assistant – General Administration**

**Specific requirements:**

- A professional qualification in Human Resource Management, or completion or current pursuit of a Diploma in Human Resource Management or an equivalent qualification from a recognized institution.
- A minimum of three (03) years of experience in human resources, administration, payroll management, or a related field.
- Proficiency in MS Office applications is essential. Knowledge of HRIS and Payroll Systems will be an added advantage.

***Salary: Negotiable***

➤ **Management Assistant – Secretary**

**Specific requirements:**

- Having completed a Secretarial Course from a recognized institution or is pursuing a professional qualification leading to Chartered Secretary status.
- Minimum of three (03) years experience in secretarial, administrative, or office management functions.
- Excellent communication skills in English are essential. Proficiency in Sinhala will be an added advantage.

***Salary: Negotiable***

➤ **Management Assistant – Finance**

**Specific requirements:**

- Having successfully completed the AAT qualification or an equivalent accounting qualification from a recognized institution.
- Minimum of three (03) years experience in accounting, finance, bookkeeping, or related administrative functions.
- Proficiency in QuickBooks and or MS Office applications is an added advantage.

***Salary: Negotiable***

Send your complete CV with the contact details of two non-related referees, along with the photocopies of relevant educational and professional certificates, by registered post to the address given below, before 20th July 2026.

Please indicate the position applied for, on the top lefthand corner of the envelope.

***(Only shortlisted candidates will be called for an interview)***

**The Principal,**
**St. John's College,**
**Jaffna.**

## மரண அறிவித்தல்



## ஸ்ரீகாந்தராசா சங்கரி

வட்டு கிழக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகாந்தராசா சங்கரி அவர்கள் கடந்த 09.06.2026 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தராசா - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீகாந்தராசா அவர்களின் பாசமிகு மனைவியும், பாஸ்கரன், கஜேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரி யும், பயோதரனின் பாசமிகு தாயாரும், தனுஷா, ராதாமணி, ஜெயஜோதி, பாலலட்சுமி, கிருஷ்ணவேணி ஆகியோரின் மைத்துனி யும், போதிகைஜனா, ஹரிமவந்தன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.07.2026) வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.61850) N

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 30 . 01 . 1948



இறப்பு 11 . 06 . 2026

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத் தலைவி

### அரசரட்ணம் விமலேஸ்வரி

அவர்கள் கடந்த 11.06.2026 அன்று காலமானார்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலை பேசியூடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாற்றி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (11.07.2026) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மறுநாள் (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல 141, 4/1 புதிய செட்டியார் வீதி, தொடர்மாடி கொட்டாஞ்சேனையில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 141, 4/1 புதிய செட்டியார் வீதி,
கொட்டாஞ்சேனை

குடும்பத்தினர்
பாரதி
076 722 4807

(CS/31974) J-1

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் திருமதி நிர்மலாதேவி சுந்தரமூர்த்தி

கடந்த 08.06.2026 ஆம் திகதியன்று இயற்கையெய்திய கஜட்டை, ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு. சண்முகம் சச்சிதானந்தசிவம், அமரர் திருமதி. பராசக்தி சச்சிதானந்தசிவம் ஆகியோரின் சிரேஷ்ர புத்திரியும், அமரர் திரு. கணபதிப்பிள்ளை விசுவலிங்கம், அமரர் திருமதி. சின்னம்மா விசுவலிங்கம் ஆகியோரின் மருமகளும், திரு. விசுவலிங்கம் சுந்தரமூர்த்தி அவர்களின் மனைவியும், திரு சுந்தரமூர்த்தி கபிலன், திரு. சுந்தரமூர்த்தி தசாங்கன் ஆகியோரின் தாயாரும், திருமதி. தர்ஷிகா கபிலன், திருமதி. நிசாந்தினி தசாங்கன் ஆகியோரின் மாமியும், செல்வி. பிரமாத்மிகா கபிலன், செல்வி. விஸ்வாத்மிகா கபிலன், செல்வன். அதிதீரன் தசாங்கன் ஆகியோரின் பேர்த்தியும், திருமதி. சத்தியபாமா பாலகுமார், திரு. சச்சிதானந்தசிவம் சிறிதரன், திருமதி. சுலோசனாதேவி சசீதரன் ஆகியோரின் சகோதரியும், திருமதி. மங்கையற்கரசி செல்வநாயகம், அமரர் திரு. விசுவலிங்கம் சத்தியமூர்த்தி, திரு. சண்முகசுந்தரம் பாலகுமார், திருமதி புவனேஸ்வரி சிறிதரன், திரு சிவராசா சசீதரன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி. பகுரூபா ரவிவர்மன், திருமிகு. ஜெயரூபா பரமகுரு, திருமதி சிவரூபா ரமேஸ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், திரு.செல்வநாயகம் ஞானசொரூபன், திரு. செல்வநாயகம் ஜங்கரன், திருமிகு. லோகேஸ்வரி செல்வநாயகம், திரு. உமாசுதன் செல்வநாயகம் ஆகியோரின் மாமியுமாகிய அமரர் திருமதி. நிர்மலாதேவி சுந்தரமூர்த்தி அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.07.2026 (ஞாயிறு) அன்று அவரது இல்லத்தில் காலை 08.00 மணிக்குப் பிரார்த்தனையோடு ஆரம்பமாகி மதியம் 11.00 மணிமுதல் மதிய உணவுபசாரமும் அன்னாரது வீட்டில் இடம்பெறவுள்ளது.

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பணிவாக வேண்டுகிறோம்.

சிவசக்திவாசம்,
ஏழாலை மேற்கு, ஏழாலை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர்...

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தனக்கு அவதூறு ஏற்படும் வகையில் சமூக வலைத்தளத்தில் கருத்துகள் பகிரப்படுவதாகத் தெரிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட 14 தரப்புகளுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் பேராசிரியர் ரகுராமால் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கில் நிபந்தனையுடனான கட்டளையைப் பிறப்பிப்பதா? இல்லையா? என்பதனை முடிவு செய்வதற்காக நேற்று வழக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, வழக்கை எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. நேற்றையதினம் எவ்வித கட்டளைகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மன்னார்...

விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் கடற்பரப்பில் இன்று அசாதாரண காலநிலை நிலவும். இதன்படி, அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலும் மற்றும் மன்னார் முதல் புத்தளம் ஊடாக சிலாபம் வரையிலும் உள்ள கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும். எனவே, மீனவர்களும் கடற்படையினரும் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## யாழ்....

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறையை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்தவும், நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்கும் நோக்கில் மூன்று விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி கட்டுநாயக்க, யாழ்ப்பாணம் மற்றும் மத்தள ஆகிய மூன்று சர்வதேச விமான நிலையங்களே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கான பிராந்திய விமான சேவைகளை வழங்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் வருகை, புறப்பாடு முனையங்கள் மற்றும் பயணிகள் தங்கும் கூடங்களை விரிவுபடுத்தி நவீனமயமாக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு அடுத்தகட்ட அபிவிருத்திப் பணிகளை விரைவில் முன்னெடுக்கவுள்ளோம். உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கான இடவசதிகளும் இதன் மூலம் விரிவாக்கப்படவுள்ளன. இதற்காக கோரப்பட்ட முதலீட்டு ஆலோசனைகளுக்கு இணங்க, சுமார் 45 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களது விருப்பக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர். இதிலிருந்து தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## யாழ். நகரில்...

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சுற்றுலாவிகளுக்கு இடையூறாக யாசகத்தில் ஈடுபட்ட 30 பேர் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணச் சுற்றுலாத்துறைப் பணியகத் தலைவர் விவேகானந்தராஜா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

யாழ். நகர்ப்பகுதியில்சுற்றுச்சூழலுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதமாகவும், சுற்றுலாவிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலும் நடமாடிய 30 யாசகர்கள் மற்றும் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தோர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரின் பங்களிப்புடன் வெளியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பாக யாழ். நகரப் பகுதி அதாவது யாழ். கோட்டைச் சுற்றுவட்டம், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைச் சூழல் ஆகிய பகுதிகளில் யாசகத்தில் ஈடுபட்டு வந்தவர்களே இவ்வாறாகக் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் வெளியேற்றப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-26-66)

## திசைகாட்டி...

பெற்ற கலவரத்துக்குத் தான் பொறுப்பேற்பதாக நீதியமைச்சர் ஹர்ஷண தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்பதாக நீதியமைச்சர் கூறியது வரவேற்கக்கூடிய விடயம். இலங்கையில் இதுபோன்று பொறுப்புக்கூறல் இருப்பது இதுவே முதல்முறை. எனினும், நீர்கொழும்பு சிறைக்கலவரத்துக்குப் பொறுப்பேற்று அமைச்சர் பதவி விலக வேண்டியதில்லை. ஏனெனில், கலவரத்தை அவர் திட்டமிடவில்லை - என்றார். (அ-ம)

## யாழில்...

**அவர்களிடம் இருந்து வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.**

**சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-**

**யாழ்ப்பாணத்தில் அதிவேகமாகப் பயணித்த காரொன்றை பொலிஸார் நேற்றுமுன்தினம் இடைமறித்துள்ளனர். இதன்போது பொலிஸாரின் உத்தரவுக்குக் கட்டுப்படாமல் அந்தக் கார் பயணித்துள்ளது. இதையடுத்து சந்தேகமடைந்த பொலிஸார் குறித்த காரை விரட்டிச்சென்று இடை மறிந்துள்ளனர். இதன்போது, காருக்குள் இருந்து வாள்களும், போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குருதிக்கறை படிந்த ஆடையும் இருந்துள்ளது.**

அது தொடர்பில் விசாரணை நடத்திய போது, கடந்த 5ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாக இளைஞர் ஒருவரைக் கடத்திச்சென்று தாக்குதல் நடத்திய விடயம் பொலிஸாருக்குத் தெரிய வந்துள்ளது. இதையடுத்தே, ஐந்து சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், தாக்குதலுக்கு உள்ளான இளைஞரும் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## நீதியமைச்சர்...

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தில் சிறைத்துறைப் பணியாளர்கள், கைதிகள் என 28 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பேற்று நீதியமைச்சர் பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. எனினும், பதவி விலகுவதற்கு நீதியமைச்சர் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார். இதையடுத்தே நீதியமைச்சர் ஹர்ஷணவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர உட்பட எதிரணி உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## டித்வா...

யான வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தனிப்பட்ட கணக்கிலோ அல்லது சட்டவிரோதக் கணக்கிலோ நிதி வைப்பிலிடப்படவில்லை. அனைத்து நிதியும் வெளிப்படைத் தன்மையுடனேயே பேணப்பட்டு வருகின்றது. பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தல், உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல் போன்ற தேவைக்காக அந்த நிதி மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை, மாகாணசபைத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, நிவாரணத்துக்காக பயன்படுத்தப்படவில்லை - என்றார். (அ-ம-இ)

## ஹெரோய்ன்...

கடத்திய நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 7 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

பொதிகள் சேவை ஊடாக யாழ்ப்பாணத்துக்குப் போதைப்பொருள் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய குறித்த பொதிகள் சேவை நிலையத்தை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். இதன்போது, பொதியைப் பெறவந்தவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தியபோது சவர்க்காரத்துக்குள் மறைத்து ஹெரோய்ன் கடத்தியமை தெரியவந்தது. இதையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு குறித்த பொதியை அனுப்பிவைத்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-26)

## போலித்தாள்கள்...

கடந்த 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 21 லட்சம் ரூபா போலி நாணயத்தாள்கள் மற்றும் அவற்றை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தது. இதையடுத்தே, குறித்த நபருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் 6 வருடகாலகட்டாயசிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தவழக்குவிசாரணைகளின்போது சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டவாதிகளான ஆறுமுகம் தனுஷன் மற்றும் கா.நசிகேதன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகி, குற்றவாளிக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மிக வலுவான வாதங்களை முன்வைத்திருந்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, குற்றவாளியின் தரப்பைக் கருத்திற்கொண்டு அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்குமாறு மன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி, இந்த போலி நாணயத்தாள் புழக்க முயற்சி என்பது தனிநபர் ஒருவருக்கு எதிரானது அல்லாமல், நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரக் கட்டமைப்புக்கும் எதிரான பாரதூரமான துரோகச் செயல் எனத் தெரிவித்திருந்தார். அத்துடன், இந்த வழக்கின் தீவிரத்தன்மை மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் இது ஏற்படுத்தக்கூடிய பேரழிவுகளை ஆழமாகக் கருத்தில் கொண்டு, பிரதிவாதித் தரப்பின் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைக் கோரிக்கையை முற்றாக நிராகரித்த நீதிபதி, குற்றவாளிக்கு 6 வருட காலக் கட்டாய சிறைத்தண்டனையைத் தீர்ப்பாக அறிவித்தார். (அ-ம-26)

## காணிகளை...

251 மற்றும் 255 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே 12ஆவது வாரமாக நேற்றும் போராட்டம் இடம்பெற்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனரமைப்புப் பணிகளின்றி ஊர்காவற்றுறை துறைமுகம்

## மக்கள் அவதி

யாழ்ப்பாணம்,ஜூலை 11

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை துறைமுக வளாகம் நீண்ட காலமாக சேதமடைந்து, பயணிகள் பாவனைக்கு உதவாத ஆபத்தான நிலையில் காணப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தத் துறைமுகம் ஊடாக தினமும் பெருமளவிலான அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் காரைநகர் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்றுவருகின்றனர்.

எனினும், நீண்ட காலமாக எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படாமல், துறைமுகப் பகுதி முற்றிலும் பாழடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கு இடையே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பாதைப் படகு சேவைகள் மற்றும் தனியார் படகு சேவைகள் தினமும் இடம்பெறுகின்றன.

இந்த சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகள், தங்களது மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் கனமான பொருள்களைச் சிதைவடைந்து உடைந்த நிலையில் காணப்படும் பாலத்தின் ஊடாகவே மிக ஆபத்தான முறையில் எடுத்துச் செல்ல வேண்டிய அவல நிலை தொடர்கிறது.

அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் நாளாந்தப் போக்குவரத்துக்கு ஆதாரமாக விளங்கும் இந்த ஊர்காவற்றுறை துறைமுகத்தை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாகப் புனரமைப்பு செய்து தர வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# நிறைவுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

இமையாணன் மத்தியின் மகுடம் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நிறைவு நாள் போட்டியும், பரிசில் வழங்கலும் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும்.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத் தலைவர் ப. யசிந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக KPL Complex உரிமையாளர் ந. இலட்சுமிகாந்தன் கலந்து கொள் வார். (க-422)

# தேயிலை கிராமங்கள் நிறுவுதல் அரசாங்கத்தால் வேலைத்திட்டம்

நாடு முழுவதும் 500 தேயிலை கிராமங்களை நிறுவுவதை இலக்காகக் கொண்ட 'சிலோன் தேயிலைக் கிராமம்' வேலைத்திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்ட அமைச்சு, தேயிலை சபை உள்ளிட்ட நிறுவனங்கள் இணைந்து நாடு முழுவதும் 500 தேயிலை கிராமங்களை நிறுவுவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன் ஆரம்ப விழா எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. முதற்கட்டமாக 14 மாவட்டங்களை உள்ளடக்கிய 147 தேயிலை கிராமங்களில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். பசுந்தேயிலை விளைச்சலை அதிகரித்தல், சிறு தோட்ட உரிமையாளர்களின் வருமானத்தை மேம்படுத்தல், மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல், தேயிலை பயிர்ச்செய்கையை சுற்றுலாவோடு ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல் ஆகியன இதன் முக்கியமாக நோக்கங்களாகும்.

நாட்டின் தேயிலை ஏற்றுமதி வருமானத்தை 2030 ஆம் ஆண்டளவில் பெருமளவு அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். இதன் ஒரு அங்கமாக, 2030 ஆம் ஆண்டளவில் தேயிலை ஏற்றுமதி மூலம் 2.5 பில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. அதே போன்று தேயிலை உற்பத்தியையும் கணிசமாக அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது-என்றார். (ச-44)

# கலாசாரப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள, சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் பிரதேச, மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ளன. 7-10 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவு, 11-14 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவு, 15-18 வயதுக்கும் இடைப்பட்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக பேச்சு,பாடல், நாட்டார் பாடல், கிராமிய நடனம், அறிவிப்பாளர், உறையுள், செய்யுள், ஓவியம் ஆகிய போட்டிகள் நடாத்தப்படும்.

போட்டிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம். விண்ணப்பப் படிவங்களை அந்தந்த பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# விளையாட்டுப் போட்டி

வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கிடையிலான மாகாண விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)


## வீடு வாடகைக்கு

இருபாலையில் இருந்து 200m தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.

அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 076 185 1503

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வீமன்காமம், கருவப்புலம் வீதி, காளிகோவில் வீதி ஆகியவற்றில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 6624 387

(CS 32121) A

## வேலையாள் தேவை

சமையல் வேலை மற்றும் ரொட்டி போடத்தெரிந்த வேலையாள் தேவை.

தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு:-

077 842 5239, 076 526 6349

(CS61840) J-1

## வேலையாட்கள் தேவை

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு:076 63 23 554

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 07 நிலபரப்புக் காணி விற்பனைக்கு.

- ஒரு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்படி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- 074 029 2338
076 077 2674

(CS 32116) A

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் உயசனறயசந மற்றும் எரிவாயு விநியோக நிறுவனம் ஆகியவற்றிற்கு பின்வரும் பணியாளர்கள் கோரப்படுகின்றனர்..

1. Hardware
   Bill Clerk
   - A/L தகைமை
   - அடிப்படை கணினி அறிவு அவசியம்
2. எரிவாயு விநியோக நிறுவனம்
   - சாரதி
     - கனரக வாகன அனுமதிப்பத்திரம் அவசியம் (AD License)
     - வாகன உதவியாளர்
   
   விற்பனைப் பிரதிநிதி
     - விற்பனைச்சிட்டை (Bill) எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும்.
     - காசு மற்றும் காசோலை கையாள தெரிந்திருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:

New Luxmee Hardware

077 225 0149 / 077 968 7961

(CR 022) A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.